# வலம்புரி




பக்கங்கள்: ஆறு

*Valampurii*

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 20 புதன்கிழமை (04.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197


## விடுதலைப்புலிகளின் தாக்குதல் அச்சம் கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் கொழும்பில் தற்கொலைத்தாக்குதல் நடத்தும் அபாயமுள்ளதாக பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பினைப் பலப்படுத்தி எச்சரிக்கையுடன் இருப்பதாக ஏ.எவ்.பி.செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் 20 ஆவது கரும்புலிகள் தினத்தினைக் கொண்டாடவுள்ளதாகவும் அதேவேளை கடந்த கிழமை பலதொன் நிறையுடைய வெடிபொருட்களை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

இவ் வெடிபொருட்களை பயன்படுத்தி கொழும்பின் அரைப்பகுதினை தாக்கியழிக்க முடியுமென பிரதமர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நீதிமன்றத்திற்கு முன்னால் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றத்திற்கு கடமைக்காகச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் மீது ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் படுகாயமடைந்ததாக தேசிய பாதுகாப்பு ஊடகமையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 7.45 மணியளவில் நீதிமன்றத் துக்கு முன்னால் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச் சூட்டுச்சம்பவத்தில் படுகாயமடைந்த பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முகமாலை பாதுகாப்பு முன்னரங்கின் மீது தாக்குதல் நடத்த முயன்ற விடுதலைப் புலிகள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன 1713 பேரில் 1002 பேர் வீடு திரும்பியுள்ளனர்

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

காணாமல்போனதாகக் கூறப்பட்ட அநேகமானோர் வீடு திரும்பியிருப்பதாகவும் கடத்தப்பட்டவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் தம்மைக் கடத்தியவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் ஆட்கடத்தல்கள், காணாமல்போதல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான (06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர்த் தாக்குதல் மூன்று இராணுவத்தினர் உயிரிழப்பு

வவுனியாவில் அடையாளம் தெரியாத குழுவினரால் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அப் பகுதியில் உள்ள குளம் ஒன்றுக்கு இராணுவத்தினர் குளிக்கச் சென்றபோது வவுனியா கல்வி வீதியில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட மூன்று இராணுவத்தினரும் வவுனியா மதகுவைத்த குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (சு-5)

## சமாதான முயற்சியில் முன்னேற்றம்

# அரசு-விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த பௌயர் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்



(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் அடுத்த வாரம் இலங்கை வருகிறார். தடைப்பட்டுப் போயுள்ள அரசு-விடுதலைப்புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காகவே பௌயர் இலங்கை வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர்கள் 20 பேரைக் காணவில்லை

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற 20 இலங்கை மீனவர்களை காணவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தென் பகுதி மீன்பிடித் துறைமுகங்களான கன்டார-கொட்டிகொட டிக்வெல மற்றும் தேவநுவர (06 ஆம் பக்கம் ,பார்க்க)


### அன்பு மாணவர்களே!

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சை மாதிரி வினாத்தாள்
பிரபல ஆசிரியர்
**வே.அன்பழகன்**
தயாரித்து வழங்கும்
வினாத்தாள் II
09.07.2007
**வலம்புரியில்**
வெளிவரும்


## அனைத்துக்கட்சிக் குழுவினரின் தீர்வுயோசனை அடுத்தமாதம்!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆராயும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் சபையின் தீர்வுயோசனைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒவ்வொரு வாரமும் சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சாத்தியமான வழி வகைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தற்போது தாங்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் மத்தியில் இனப்பிரச்சினைத் தீர்வுகுறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகிறது. இவற்றை மாற்றியமைத்து அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதே தமது நோக்கம் என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான (06 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பௌயரைச் சந்தித்துப் பேச்சு

(நோர்வே)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தலைமையிலான நோர்வேப் பிரதிநிதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசியுள்ளனர். ஐரோப்பிய சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இரா.சம்பந்தன்,சுரேஷ் பிரேமச்சந்திரன் , கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஒஸ்லோவில் இடம் பெற்ற இந்த சந்திப்பின்போது இலங்கையின் தற்போதைய நிலை குறித்து நோர்வே அனுசர (06 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்ப் பகுதியில் நேற்றுத் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு,நல்லூர், நாயன்மார்கட்டு மற்றும் கோவில் வீதி உள்ளிட்ட பகுதிகள் யாவும் நேற்று அதிகாலை முதல் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. நூற்றுக்கணக்கான பொலிஸாரும் படையினரும் இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத் தேடுதல் நடவடிக்கையினால் போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டதுடன் மாணவர்கள், அரச (06 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று வவுனியாவுக்கு விஜயம்!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் லால் ஜோஹான் சொல்பேர்க் வவுனியாவுக்கான விஜயமொன்றை இன்று மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உலங்கு வானூர்தியில் செல்லும் அவர் அங்கிருந்து கிளிநொச்சிக்கும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிக்குச் செல்லும் பட்சத்தில் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## இல.இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுவார்த்தையே ஒரே வழி

### நேபாளத்தில் அமைச்சர் போகொல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண பேச்சுவார்த்தையே ஒரே வழி என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாகுமென வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். எனினும் பயங்கரவாதத்திற்கு எதிராக தாக்குதல் நடாத்துவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர்,நேபாளப் பிரதமர் கிரியாத் பிரசாத் கொயிராளாவைச் சந்தித்த போது இவ் (06 ஆம் பக்கம் பார்க்க)

# குற்றவியல் அவதூறுச் சட்டத்தை கொண்டு வந்தால் இராஜினாமா

(கொழும்பு)

குற்றவியல் அவதூறுச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தால் அடுத்த கணமே எனது அமைச்சுப் பதவியை நான் இராஜினாமா செய்வேன். இதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று நிதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாகும். இந்நிலையில் குற்றவியல் அவதூறுச் சட்டமூலமானது தற்போதைய நிலையில் நாட்டிற்குப் பொருத்தமாக அமையாது.

இந்தச் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வராது என்று நான் திடமாக நம்புகின்றேன். அதனையும் மீறி குற்றவியல் அவதூறுச் சட்டம் கொண்டு வரப்பட்டால் அடுத்தகணமே நான் எனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வேன் என்றார். (ச-5)

# சந்தேகத்திற்கிடமான லொறி பொலிஸாரால் தடுத்து வைப்பு

கொழும்பு ஒக்ஷால் வீதியில் நேற்றுக் காலை சந்தேகத்திற்கிடமான லொறி ஒன்றை விசேட அதிரடிப் படையினர் மற்றும் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டமையால் அப் பகுதியில் பதற்றம் நிலவியது.

நேற்றுக் காலை வழமையான சோதனைகள் மேற்கொண்ட பாதுகாப்புப் படையினர் குறித்த லொறியை முற்றாகச் சோதனை செய்தனர்.

எனினும் அவ் லொறியில் சந்தேகத்திற்கிடமான ஏதும் காணப்படவில்லை. தேயிலை மாத்திரமே காணப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜயந்த கமகே தெரிவித்தார்.

தற்போது குறித்த லொறி கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-1)

## முட்டையின் விலை வீழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலுள்ள இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுவதால் முட்டையின் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு முட்டையின் விலை 15 ரூபாவிலிருந்து 20 ரூபாய் வரை விற்கப்பட்டு வருகின்றது. (எ-72)

## விண்ணப்பம் கோரல்

தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு கட்டடப் பராமரிப்பு உத்தியோகஸ்தர் மற்றும் தச்சுத் தொழிலாளர் வகுப்பு II ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னதாக தேசிய சுவடிகள் பணிப்பாளர், தேசிய சுவடிகள் திணைக்களம், இல.7, றீட் அவனியூ, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ் விண்ணப்பம் தொடர்பாக எதிர்வரும் 6 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி அறிவித்தலை இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிட முடியும். (ச-5)

# நாட்டில் சமாதானத்தை மேம்படுத்த மன்னார் மனித நேய அமைப்புக்கள் முடிவு

(மன்னார்)

நாட்டில் நிலவும் அசாதாரண நிலையைப் போக்கி சமாதானத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மன்னார் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டிருக்கின்றது.

இதன் ஒரு கட்டமாக சமாதானத்தை வலியுறுத்தும் நோக்கில் எதிர்வரும் 8 ஆம் திகதி மன்னாரிலிருந்து அநுராதபுரம் நோக்கி 40 பேரைக் கொண்ட ஒருகுழுவொன்று செல்ல விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல் அமைப்பு, சமாதானமும் முரண்பாடுகள் தொடர்பான கற்கை நெறி மாணவர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மன்னார் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ச-3)

## சேக்கஸ் ஓடுபாதை உடைந்து வீழ்ந்து 20 பேர் படுகாயம்

(கொழும்பு)

வெலிகம சேக்கஸ் ஓடுபாதையில் மோட்டார் வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது உடைந்து வீழ்ந்ததில் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு உடைந்து வீழ்ந்ததற்கான காரணங்களைக் கண்டறிவதற்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஐ.தே.கவிலிருந்து நால்வர் அரசுடன் இணையவுள்ளனர்

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மேலும் நால்வர் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக அமைச்சர் எச்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், 2010 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தை பலமான நிலையில் வைத்திருக்கும் வகையில் இவர்கள் அரசாங்கத்தில் இணைய இணக்கம் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை இவர்கள் நால்வருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் சந்திரசேன தெரிவித்தார். (ச-3)

# வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டால் வறிய மக்களே பாதிக்கப்படுவார்கள்

## ப்ாலித கோஹறகன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவி தடைப்படுமானால் இலங்கை நெருக்கடிகளையும் எதிர்நோக்காது. எனினும்இலங்கையில் பின்தங்கிய பகுதிகளிலுள்ள வறியவர்களைப் பாதிக்கும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிதகோஹறன்ன ஹிந்துஸ்தான் ரைம்ஸுக்குத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய ராஜ்ஜியம் 50வீதமான உதவிகளை நிறுத்தியுள்ளது. ஜேர்மனி இது தொடர்பாகத் தெரிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் உதவிகளை நிறுத்தப் போவதாக குரல்கள் எழுப்பியுள்ளது.

இந்த நாடுகள் போதியளவு உதவிகளைத்தரவில்லை. ஆனால் யப்பான், சீனா, இந்தியா அதிகளவு உதவிகளை வழங்கியுள்ளன. பிரித்தானியா தனது 1.04 மில்லியன் ஸ்ரேலிங் பவுணைத் தர மறுத்தால் இலங்கைக்குப் பாதிப்பு இல்லை.

எனினும் பின்தங்கிய கிராமத்து விவசாயிகள் நீர்விநியோகத் திட்டம் தடைப்படும் என பாலித கோஹறன்ன மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# கொழும்புத்துறைமுகத்தின் பாதுகாப்பு அரசாங்கத்தினால் பலமடங்கு அதிகரிப்பு

தென்னிலங்கையில் விடுதலைப்புலிகளின் பிரதான இலக்காக எதிர்வுகூறப்படும் கொழும்புத்துறைமுகத்தின் பாதுகாப்பைப் பல மடங்காக அரசாங்கம் அதிகரித்துள்ளது. துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் 24 மணிநேரமும் நீருந்து விசைப்படகுகளின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் முழுமையான பலம்குறித்துப் படைத்தரப்பு அறிந்து கொள்ள முடியாதிருப்பதாகவும் அவர்களிடம் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தக் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கலாம் என்றும் படைத்தரப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

கடற்புலிகளின் நீர்மூழ்கிகள் மற்றும் நீரோடிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கு நீருக்கடியில் கண்காணிப்புக் கருவிகளும் பொருத்தப்படவுள்ளன.

தற்போது உலகின் பலம் மிக்க இராணுவ கட்டமைப்பை உடைய ஒரு சில நாடுகளிடமே இவ்வாறான நீர்கீழ்க் கண்காணிப்புத் தொகுதிகள் இருப்பதாகவும் இவற்றைக் கொள்வனவு செய்வதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்படும் என்றும் பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்தில் 90 சதவீதமான வர்த்தக நடவடிக்கைகள் கொழும்புத்துறைமுகத்தினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கொழும்புத்துறைமுகம் மீது புலிகள் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடாத்தினால் இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே அதிகசெலவில் நீர்கீழ் கண்காணிப்புத் தொகுதியைக் கொழும்புத்துறைமுகத்தில் நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (எ-5)

## கற்றல் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி

(கோப்பாய்)

நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கற்றல் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் பழைய மாணவி செல்வி வனஜா இராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச-79)

# வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நட்டஈடு

(கொழும்பு)

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நட்ட ஈடு வழங்கியுள்ளது.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப் பகுதியில் வன்செயல்கள் காரணமாக சொத்துக்களையிழந்த 200 அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு நேற்று நட்டஈடு கொழும்பில் வைத்து வழங்கப்பட்டது.

இதற்காக மீள் குடியேற்ற அதிகார சபை 33 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு உந்துதல் அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். (ச-3)




நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகமும் நல்லூர் றோட்டறக்ட் கழகமும் ஒன்றிணைந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் மேற்கொண்ட இரத்ததான நிகழ்வினைப் படத்தில் காணலாம்.

# பேருந்துக் கட்டணங்கள் இன்றுமுதல் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துக் கட்டணங்கள் இன்றுமுதல் அதிகரிக்கப்படுகின்றது. எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக பேருந்துப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் என்.கணேசபிள்ளை அறிவித்துள்ளார். புதிய விலைக் கட்டணங்கள் வருமாறு:-

| தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் | தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|
| 5.00 | 5.00 | 30.00 | 36.00 |
| 6.00 | 8.00 | 31.00 | 37.00 |
| 9.00 | 11.00 | 32.00 | 38.00 |
| 12.00 | 13.00 | 34.00 | 40.00 |
| 13.00 | 15.00 | 35.00 | 41.00 |
| 15.00 | 18.00 | 36.00 | 43.00 |
| 17.00 | 20.00 | 37.00 | 44.00 |
| 19.00 | 22.00 | 38.00 | 45.00 |
| 19.50 | 23.00 | 39.00 | 46.00 |
| 21.00 | 25.00 | 41.00 | 48.00 |
| 22.00 | 26.00 | 42.00 | 49.00 |
| 23.00 | 27.00 | 43.00 | 50.00 |
| 23.50 | 28.00 | 44.00 | 52.00 |
| 24.00 | 29.00 | 45.00 | 53.00 |
| 26.00 | 31.00 | 46.00 | 54.00 |
| 27.00 | 32.00 | 48.00 | 56.00 |
| 28.00 | 33.00 | 49.00 | 57.00 |
| 29.00 | 34.00 | 50.00 | 58.00 |

# இளமைக்குக் கல்வி ஈந்த வள்ளல் இராசரத்தினம்

மனிதன் தேடவேண்டிய செல்வங்களில் முதன்மையானது கல்வி. கல்வியின் சிறப்புப் பற்றி பண்டைய இலக்கியங்கள் நன்கு விளக்கியுள்ளன. சங்கப்பாடல்கள் தொடக்கம் பாரதியின் கவிதை வரை கல்வியின் மேம்பாடு பேசப்பட்டுள்ளது. இன்று கல்வியின் பயன் நன்கு உணரப்பட்டுள்ளது. இளைய தலைமுறையினர் இக் கல்வியின் தனித்துவம் பற்றி நன்கு உணர வேண்டும்.

கல்வியினால் தீயவற்றை அறிய முடியும் உள்ளத்திலே நடுநிலையோடு ஒழுக முடியும். அதனால் எல்லோரையும் கல்வியுடையவராக்கப்பணி செய்வதே உண்மையான பணியாகும். மனிதனுடைய உடலுறுப்புக்களான தலை, மார்பு, உகிர், காது, பல் என்பவற்றின் வனப்பை விடச் சொல்லின் வனப்பே உண்மையான வனப்பு எனச் 'சிறுபஞ்சமூலம்' என்னும் பழைய நூல் கூறுகிறது. இதேபோல இடை, தோள், நடை, நாண், கழுத்து என்பவற்றைவிட எழுத்தின் வனப்பே உண்மையான வனப்பு என 'ஏலாதி' என்னும் நூல் கூறுகிறது. எண்ணும் எழுத்தும் மக்களுக்கு கண்களைப் போன்றவை எனத் 'திருக்குறள்' விளக்கி உள்ளது. கற்றவர்களுக்கு கல்வியே சிறந்த அணிகலனாகும் என 'நீதி நெறி' எடுத்துரைத்துள்ளது. மனத்தின் மயக்கத்தைப் போக்கும் அரிய மருந்து கல்வியே என நாலடியார் விளக்கியுள்ளது.

கீழ்க்குலத்தில் பிறந்தாலும் கல்வியைப் பெற்றிருந்தால் மேற்குலத்திற் பிறந்தவரும் பணிவரெனப் 'புறநானூறு' தெளிவுபடுத்தியுள்ளது. ஒரு குடும்பத்தில் கல்லாத மூத்தவனைக் கைவிட்டு கற்ற இளையவனையே உலகம் பாராட்டும் என 'நான் மணிக்கடிகை' கூறுகிறது. கைப்பொருளில் மெய்ப்பொருள் கல்வியெனக் 'கொன்றைவேந்தன்' கூறியுள்ளது. கல்வி வெள்ளதால் போகாது வெந்தழலால் வேகாது எனக் குசேலோபாக்கியானம் புகழ்கிறது.

இத்தகைய கல்வியை எல்லோருக்கும் கொடுக்கவேண்டும். அதிலும் குறிப்பாக இளமையின் தொடக்கத்தில் நிற்கும் தலைமுறையினருக்குக் கொடையாகக் கொடுக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் தொண்டு புரிந்தவர் வள்ளல் சு. இராசரத்தினம் ஏழைகளிடம் கல்விச் செல்வத்தை ஈந்த அவருடைய நினைவு எம் உள்ளங்களில் நிலைத்திருக்கவேண்டும் அவரது கொடைப் பணிக்கு களம் அமைத்துவிட்டவர் வள்ளல் இராமநாதன். தான் வாழும் காலத்திலே யாழ்ப்பாணத்தில் வழிபாடும் கல்வியும் வளம் பெறவெனக் கல்விக் கூடங்களை அமைத்தவர் . இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியும் , இராமநாதன் கல்லூரியும் அவரால் நிறுவப்பட்ட கலைக்கூடங்கள்.

பல்கலைக்கழகம் பரமேஸ்வராக் கல்லூரியில் தொடங்கப்பட்ட போது கல்லூரி யாழ்ப்பாணத்து முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் வந்து இணைய நேரிட்டது. இராமநாதன் கல்லூரி வளங்கள் பல பல்கலைக் கழகத்தால் ஆட்கொள்ளப்பட்டன. இராமநாதன் இவ்விரு கல்லூரிகளுடன் 'சைவவித்தியா விருத்திச் சங்கம்' என்ற ஒரு அமைப்பையும் நிறுவியிருந்தார். தமிழ்க்கல்வியையும் சைவப்பண்பாட்டையும் வளர்த்து உலகெங்கும் பரப்ப எண்ணினார். மேலைநாட்டில் சில காலம் வாழ்ந்த போது தன் நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டுப் பணி யாக எண்ணிச்செயற்பட்டார். வழிபாடும் கல்வியும் இணைந்த ஒரு தொண்டு நிறுவனமாக நிலைத்து நிற்கவேண்டும் எனத் தொலை நோக்குடன் பணியாற்றினார்.

இராமநாதன் வள்ளலின் தொலை நோக்கான தொண்டுப்பணியில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் தொண்டு செய்தவர் சு. இராசரத்தினம் .அதனால்.அவர் பெயருக்கு முன்னால் 'இந்துபோர்ட்' என்ற நிறுவனத்தின் பெயரும் இணைய 'இந்துபோர்ட் இராசரத்தினம்' எனப் பெயர் பெற்றார். அவருடைய தொண்டுப் பணிக்கு இராமநாத வள்ளலின் வழிகாட்டல் உதவியாக அமைந்தது. சைவப்பாடசாலைகளை அமைத்துக் கல்விச் செல்வத்தை எல்லோருக்கும் வழங்கப் பணியாற்றினார். இலங்கை முழுவதும் ஏறக்குறைய 385 சைவப்பாடசாலைகளை நிறுவினார். கிறிஸ்தவர்களின் கல்விப் பணிக்குச் சவாலாக இவரது பணி அமைந்தது.

சைவச்சிறுவர்களைப் பொறுப்பாக வளர்க்கவென ஒரு சைவச்சிறுவர் இல்லம் அமைக்கப்பட்டது. ஆனால் அதனுடைய பெயர் 'முத்துத்தம்பி அநாதை சாலை' என்றே தொடக்க காலம் முதல் வழங்கப்பட்டது. பின்னர் முத்துத்தம்பி அநாதை இல்லமாயிற்று. இன்று சிறுவர் நிறை வாழ்வு இல்லமாக , 'சைவ சிறுவர் இல்லமாக' விளங்குகிறது. இராசரத்தினம் சைவவித்தியா விருத்திச் சங்க உறுப்பினர்களுடன் இணைந்து செய்த பணி காலத்தின் தேவையாகவும் இருந்தது. வறுமையால் பீடிக்கப்பட்ட ஏழைக்குழந்தைகளுக்கு உண்டியும் உறையுளும் கொடுத்து கல்வி பயிற்றி அவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் உருவாக்கினார்.

சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுப் பணியின் தொடர்ச்சி நிலையில் அவர்களுடைய இளமைக் காலத்துக் கல்விப்பயிற்சிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இள்ளஞர்கள் பயிற்சி பெற்று ஆசிரியர்களாக இலங்கை எங்கும் பணிசெய்யச் சென்றனர். தமிழும் சைவமும் வளரப் பணிசெய்ய ஆவல் கொண்ட தொண்டுள்ளம் கொண்டு இளையோர் கூட்டமும் இக் கலாசாலையில் வந்து பயிற்சி பெற்று ஆசிரியர்களாக வேலை வாய்ப்புப் பெற்றனர். இந்த வகையில் இன்று பல ஆசிரியர்கள் இளைப்பாறிய நிலையில் மதிப்போடு வாழ்கிறார்கள் .

இராசரத்தினத்தின் பணியின் தொலை நோக்கு நாம் மனங்கொள்ளவேண்டும். வறுமையில் வாடும் சிறுவரை வளர்த்துப் பாடசாலைக் கல்வியைப் புகட்டி அவர் இளமைப் பருவத்தில் ஆசிரியர் பயிற்சியை வழங்குவது எக்காலத்திற்கும் ஏற்றபணியாகும். அநாதை இல்லத்தில் வாழ்ந்த சிறுவர் இளமைப்பருவத்தில் நம்பிக்கையோடு இல்லத்தை விட்டு வெளி உலகில் இணைந்தனர். தான் கற்ற கல்வியையும் வாழ்ந்த வாழ்வையும் எல்லோருக்கும் வழங்கவேண்டும் என்ற கொடை உள்ளத்தோடு தொண்டர்களாக வாழும் நிலைபெற்றனர். இந்த வாய்ப்பைப் பெற்ற ஆண்களையும் பெண்களையும் பெற்றோர்களாக இன்று காணமுடிகிறது.

அனைவருக்கும் கல்வியை வழங்கவேண்டும் என்ற நினைப்பும் கல்வியே உயர்ந்த செல்வம் என்பதை உணரும் பயிற்சியும் தான் இராசரத்தினத்தின் கொடை மரபாயிற்று. இன்று சிறுவர் இல்லங்கள் பற்றி மேலைநாட்டவர் பல ஆய்வுகளை நடத்திப் பெற்ற முடிவை இராசரத்தினம் அனுபவத்தால் பெறவைத்தார்.

சிறுவர் இல்லம் என்பது எதிர்காலத்தில் நினைத்து மகிழ வேண்டிய மனதால் வழிபட வேண்டிய இடமாகும். சிறுவர்களின் வயதெல்லை 18 என இன்று வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழர் பண்பாட்டில் இந்த இளமை நிலை 12க்கு மேல் என வகுக்கப்பட்டுள்ளது.துடிப்பான இளமைப் பருவத்தைக் கல்விப் பேற்றிற்காகச் செலவிட வேண்டும். கற்ற கல்விக்கேற்ற தொழில் வாய்ப்புப் பெற்றுக்குடும்பவாழ்வில் இணையவேண்டும். இத்தகைய இல்லத்து வாழ்வு , நிறைவான வாழ்வுக்கு அடித்தளமாக அமைய வேண்டும் என்பதே இராசரத்தினத்தின் இலக்காக இருந்தது. இறுதி மூஞ்சு வரை இதற்காகவே உழைத்த அவருடைய நினைவு இளம் உள்ளங்களில் பதிய வைக்க நாம் பணிசெய்ய வேண்டும்.

பேராசிரியர்
அ.சண்முகதாஸ்

இராசரத்தினத்தின் வழிகாட்டலில் கல்வியைப்பெற்ற அனைவரும் இதைச் செய்ய கடமைப்பட்டவர்கள். இன்று அவர்கள் பெற்றுள்ள வாழ்வும் வள்மும் இராசரத்தினம் ஈந்தவை. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற நோக்கோடு அவர்கள் பணி தொடரவேண்டும். எமது சிறுவருடைய இளமைப்பருவத்துக்கான வழிகாட்டல் களை நாம் காலத்துக் கேற்றவகையில் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். சிறுவர் இல்ல வாழ்வியல் ஒருவரை எவ்வாறு பண்படுத்திக் கல்வியாளனாக உலகில் தலைநிமிர்ந்து வாழவைக்கும் என்பதை இராசரத்தினம் நன்கு உணர்த்திப் பணி செய்தார். அவர் எமது நினைவில் பதிய வேண்டிய ஒரு வழிகாட்டி. அவர் வழிநின்று பணிசெய்வதே இன்று நலம் தரும்.

# நான்கு கல்விப் புல சேவைகளை இணைந்த சேவையாக்க பரிந்துரை

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

சம்பள ஆளணி ஆணைக்குழு இலங்கையின் அதிபர் ஆசிரியர்களுக்கென புதிதாக சிபார்சு செய்த சம்பள அளவுத் திட்டத்தை அடியோடு நிராகரிப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஆணைக்குழு முன் தெரிவித்துள்ளார்.

சம்பள ஆளணி ஆணைக்குழுவின் சம்பள மீளாய்வுக் குழுக்கூட்டம் கடந்த வியாழனன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆணைக்குழுத் தலைவர் லயன்ஸ் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

ஒன்பது கல்விசார் தொழிற்சங்கங்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலர் த.மகாசிவம் கூறிய கருத்தை ஏனைய தொழிற்சங்கங்கள் ஆமோதித்தன.

இதன் விளைவாக இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை கல்வி நிருவாக சேவை, இலங்கை கல்வியியலாளர் சேவை ஆகிய நான்கு கல்விப் புலசேவைகளையும் ஒருங்கிணைத்து ஒரு சேவையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

சம்பள ஆணைக்குழுவின் இச்சிபார்சை ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கான பரிந்துரைகளை ஆசிரிய தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 04ஆம் திகதிக்கு முன்னர் சம்பள ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் தலைவர் லயனல் பெர்னாண்டோ கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே, மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, கல்விப்பணிப்பாளர் வசந்த குணரத்ன, உதவிச் செயலாளர் றோஹான் சம்பள. ஆணைக்குழுவின் செயலாளர் கே.எல். எல்.விஜயரத்ன, மேலதிக செயலாளர் உபசேன சேனநாயக்க, உதவிச் செயலாளர் ஜி.கஹவத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் என். இராஜநாதன், பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடுத்த சம்பள ஆணைக்குழுக் கூட்டம் ஆகஸ்ட் 07 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும். நேற்றைய கூட்ட சம்பள சிபார்சு தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் என்.இராஜநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

1994க்கு முன்பு ஆசிரியர்களின் சம்பளம் வலுகுறைவாக இருந்தது. அதனைச் சீர் செய்யும் நோக்குடன் இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்டது. அது ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வுடன் ஓரளவு அந்தஸ்தையும் வழங்கியது.

31.12.1996 வரை ஆசிரியர் சேவை போற்றும் படியாக இருந்தது. ஆசிரியர் சேவை 1இன் சம்பளம் கல்வி நிர்வாகசேவை 1இன் சம்பளத்தை ஒத்ததாக இருந்தது. அது போல் ஆசிரிய சேவை 2 - I இன் சம்பளம் இ.க.நி.சேவை II இன் சம்பளத்தையும் ஆசிரியர் சேவை 2-II இன் சம்பளம் இ.க.நி. சேவ்வ IIIஇன் சம்பளத்தையும் ஒத்ததாக இருந்தது.

ஆனால் பி.எபி.பெரேரா சம்பள ஆணைக் குழு சிபார்சின் பிரகாரம் 01.01.97 முதல் சகல அரச ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்ந்தப்பட்ட போதிலும் ஆசிரியர் ,அதிபர் சேவைக்கு உயர்த்தப்படவில்லை. பின்னர் அது பற்றி அறிவிக்கப்படும் என்று அன்று கூறப்பட்டது.

ஆனால் பின்னர் அது பற்றி எதுவுமே அறிவிக்கப்படவில்லை. அதனால் அதிபர், ஆசிரியர் சம்பளம் மேலும் ஒரு தடவை பின் தள்ளப்பட்டது.

மேலும் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் 01.01.2006அமுலுக்கு வந்த சம்பளத்திட்டப்படியும் அதிபர், ஆசிரியர்களுக்கு எவ்வித விமோசனமுமில்லை.

எனவே 01.01.1994க்குப் பின்பிருந்தது. போன்று சமனும் சமாந்தரமுமான சம்பளத் திட்டம் கூடிய அளவில் சிபார்சு செய்யப்பட வேண்டும்.

வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் கூழய சம்ளத்தை அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கி தொழிலுக்குரிய அந்தஸ்தை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

அப்போதுதான் நாட்டில் கல்வி அபிவிருத்தி உருவாகும். அதனூடாக பொருளாதார அபிவிருத்தியை எதிர்பார்க்கலாம்.

எனவே அகில இலங்கை சமாந்தர சேவையில் ஆசிரியர், அதிபர், நிருவாகிகள் கல்வியியலாளர் சேவைகளை உள்வாங்கி நல்ல சம்பள அளவுத்திட்டத்தை உருவாக்க வேண்டும். அப்படியில்லாத எந்த சிபார்சையும் நாம் முற்றாக நிராகரிப்போம். அதற்கெதிராக தொடர்ச்சியான போராட்டம் நடத்தவும் தயங்கமாட்டோம் என்றும் கூறினார். (அ-5)

## பற்சிகிச்சை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அரசினர் வைத்திய சாலையில் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு தினங்களிலும் பற்சிகிச்சை நடைபெறுமென ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ச-72)

## இன்று ஒரு தகவல்

# தெரியாது

"தெரியாது என்பது அருமையான ஒரு சொற்பதம். எவரும் எங்கேயும் எப்போதும் எதையும் செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளப் பயன்படுத்தும் சுவையான பதம். ஆனால் செய்வதைச் செய்துவிட்டு சொல்வதாகச் சொல்லிவிட்டு இதைப் பயன்படுத்தினால் முதுகு புளிப்பதற்கும் கைகால் மற்றும் மூட்டுகள் நோவில் உவர்ப்பதற்கும் மகத்துவமான ஒரு பதம்.

மாறாகத் துணிந்தவனுக்கு வண்டிச்சில்லுக்கு அச்சாணி எப்படியோ அப்படியே நன்மைக்கும் தீமைக்கும் இது ஒரு பொதுப்பதம். ஆனால் சில வேளைகளில் உள்ளங்களைக் குளிர வைப்பதற்கும் அசல்பதம் என்பதை விளக்குவதற்கு ஒரு கதை.

கிராமப் புறத்தில் ஒரு ஆரம்ப பாடசாலை. அந்தப் பாடசாலையின் வினைத்திறனைக் கண்காணிக்க அதே தன்மை கொண்ட அதிகாரிகள் குழு குறிப்பிட்ட தினத் தன்று பாடசாலைக்கு வருகை தரவுள்ளதாக அறிவித்துள்ளது.

கல்யாண வீடொன்றால் வீடு எப்படிக் கலகலப்பாகுமோ அப்படியே பாடசாலையும் ஆகிக்கொண்டிருக்கின்றது. அதிபரும் பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் வசந்தா ரீச்சருக்கு மட்டும் ஒரு அச்சம். அதாவது அவருடைய வகுப்பறையிலுள்ள ஒரு மாணாக்கன் மட்டும் கடை மாணாக்கன்.

படிப்பித்துவிட்டு எதைக் கேட்டாலும் தெரியாது என்பதே இவனது மகுட வாசகம். சொல்வதைச் செய்யமாட்டான். வரவில் ஒழுங்கீனம், துப்புரவிலும் அசட்டை, எது கேட்டாலும் ஓயாமல் பொய்யுரைப்பான் எதையும் பிள்ளை நேயத்துடனோ இவனை நீ நாளைக்குப் பாடசாலைக்கு வரவேண்டாம் என்று எப்படிச் சொல்வது. நாளைக்குப் பாடசாலையில் திருவிழா வல்லவா என்று எண்ணியவாறு அதிபர் காலைக்கூட்டத்தில் சொன்னதற்கு மேலாக வகுப்பில் பொது அறிவித்தலொன்றை வழங்கி விடைபெற்றார் ரீச்சர்.

மறுநாள் பொழுது விடிந்தது. இன்று லீவும் எடுக்க முடியாது. மனத்திருப்திக்காக பத்திரிகையில் இன்று நாள் எப்படி என்று பார்க்கலாமென்றால் அதுவும் தற்போது வருவதில்லை. கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஒழுங்காக வேலை செய்து பலரது பாராட்டையும் பெற்று எனக்கு அவர் ஒருவனால் மானம் போகப் போகுது.

வருகிறவரும் புதிதாக நியமனம் பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர். புதுச்செருப்பு கடிக்கும் என்று சொல்வார்கள். இவ்வாறு எண்ணியவாறு வானொலியை இயக்க அதுவும் அவரின் இராசிக்கு "அதிகாரிகள் பாராட்டு, எடுத்த காரியம் கைகூடும்" என்று கூறியதைக் கேட்டு திருப்தியுடன் பாடசாலைக்குச் சென்றார்.

குழுவினர் வகுப்புக்கு வந்தார்கள். எல்லா மாணவர்களும் நல்ல உடையுடுத்து வகுப்பில் இருந்தார்கள். ஆனால் உதவிக் கல்விப் பணிப்பாளரோ அந்தக் கடை மாணவனைக் கூட்டி தமிழ்மொழி பாடத்தில் "தெரியும்" என்பதன் எதிர்ச் சொல்லைக் கேட்க அவனும் "தெரியாது" என்றான் அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு சுற்றாடல் பாடத்தில் அமாவாசையன்று வானத்தில் நிலவு தெரியும் என்று கேட்க அவன் "தெரியாது" என்றான் உடனே. அதிகாரியின் பாராட்டும் நன் மதிப்பும் ஆசிரியருக்கு. அதிபருக்கோ மிக்க மகிழ்ச்சி.

ஆசிரியருக்கோ உச்ச திருப்தி. அதிபர் காரியாலயம் சென்ற அதிகாரிகள் விடைபெற்றுச் சென்றனர். ரீச்சரின் கவலை தீர்ந்தது. நல்லதைச் செய்தால் "தெரியாது" என்ற பதமும் திருப்தியைத் தரும் என்று உண்மை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டி முடிவுகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே இந்த வருடம் நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாண வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய ஐந்து கல்வி வலய மட்டத்திலும் வெற்றிபெற்று தெரிவு செய்யப்பட்ட அணிகள் யாழ்.மாவட்டமட்ட போட்டிகளில் கலந்துகொண்டனர்.

### வலைப்பந்து

*15 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
2ஆம் இடம்:- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
3ஆம் இடம்:- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

*17 வயது பிரிவு பெண்கள்.*

1ஆம் இடம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
2ஆம் இடம்:- கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
3ஆம் இடம்:- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

*19 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
3ஆம் இடம்:- வட இந்து மகளிர் கல்லூரி

### உதைபந்தாட்டம்

*17 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- அளவெட்டி அருணோதயா கல்லூரி
2ஆம் இடம்:- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
3ஆம் இடம்:- வேலணை துரைச்சாமி மத்திய மகாவித்தி.

*19 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி
2ஆம் இடம்:- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
3ஆம் இடம்:- சென்பற்றிக்ஸ் கல்லூரி

### மேசைப்பந்து

*19 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- யாழ்.சென்ஜேம்ஸ் கல்லூரி
2ஆம் இடம்:- நெல்லியடி மத்திய மகாவித்தி.
3ஆம் இடம்:- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

*19 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
2ஆம் இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- யாழ்.வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை.

### கிரிக்கெட்

*19 வயது ஆண்கள்*

1ஆம் இடம்:- யாழ்.இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:- தெல்லிப்பழை மகாஜன கல்லூரி
3ஆம் இடம்:- தும்பளை சிவப்பிரகாச வித்தி.

### கரபந்து

*15 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- ஆவரங்கால் மகாஜன வித்தி.
2ஆம் இடம்:- புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி
3ஆம் இடம்:- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி

*17 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.
2ஆம் இடம்:- அச்சுவேலி மத்திய கல்லூரி
3ஆம் இடம்:- சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

*19 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி
2ஆம் இடம்:- நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

*15 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
2ஆம் இடம்:- மானிப்பாய் மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

*17 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
2ஆம் இடம்:- நாவற்குழி அ.த.க.பாடசாலை
3ஆம் இடம்:- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

*19 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- மல்லாகம் மகாவித்தி.
2ஆம் இடம்:- புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி
3ஆம் இடம்:- மட்டுவில் மகாவித்தி.

### பட்மின்ரன்

*19 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- உடுவில் மான்ஸ் மகாவித்தி.
2ஆம் இடம்:- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

*19 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- உடுவில் மான்ஸ் மகாவித்தி.
2ஆம் இடம்:- யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி
3ஆம் இடம்:- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி

### கூடைப்பந்து

*19 வயதுப் பிரிவு ஆண்கள்*

1ஆம் இடம்:- யாழ்.மத்திய கல்லூரி
2ஆம் இடம்:- யாழ்.இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

*19 வயதுப் பிரிவு பெண்கள்*

1ஆம் இடம்:- யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்
2ஆம் இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- கொக்குவில் இந்துக்கல்லூரி

### உடற்பயிற்சிப்போட்டி

*பெண்கள் 19 வயதுப் பிரிவு*

1ஆம் இடம்:- மானிப்பாய் மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:- கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் ம.வித்தி
3ஆம் இடம்:- சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

### சதுரங்கப் போட்டி

*பெண்கள் 15 வயதுப் பிரிவு*

1ஆம் இடம்:- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:- பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- நெல்லியடி மத்திய மகா வித்தி.

*பெண்கள் 19 வயதுப் பிரிவு*

1ஆம் இடம்:- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
2ஆம் இடம்:- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
3ஆம் இடம்:- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

*ஆண்கள் -15 வயதுப் பிரிவு*

1ஆம் இடம்:- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
2ஆம் இடம்:- நெல்லியடி மத்திய மகாவித்தி
3ஆம் இடம்:- யாழ்.இந்துக்கல்லூரி

*ஆண்கள் - 19 வயதுப் பிரிவு*

1ஆம் இடம்:- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
2ஆம் இடம்:- யாழ். இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:- மீசாலை விக்கினேஸ்வரா வித்தி. (அ)

## இராசிபலன்

*04.07.2007*
*ஆனி 20, புதன்கிழமை*
*சதுர்த்தி பிற்பகல் 5.04 மணிவரை*
*அவிட்டம் மாலை 05.20 மணிவரை*
*இராகுகாலம் 11.57-01.27 மணிவரை*
*சுபநேரம் 04.27-05.57 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்*

**மேடம்** தனவருவாய், எடுத்த காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல்.

**இடபம்** அதிகாரம், அதிக பிரயாசை, நிலைமாற்றம், நல்ல செய்தி.

**மிதுனம்** பித்த ரோகம், உத்தியோக பங்கம், முயற்சி தாமதம், பொருள் விரயம்.

**கடகம்** பிரயாணபயம், வீண்பகை, காரிய தடங்கல், போசன சுகம்.

**சிங்கம்** தேகநலன், கீர்த்தி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**கன்னி** தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், தனவருவாய், சத்துரு ஜெயம்.

**துலாம்** வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், பணக்குறைவு.

**விருச்சிகம்** உடல்நலக்குறைவு, மனச்சோர்வு, தன விரயம், தொழில் சிந்தை.

**தனுசு** உறவினர் உதவி, பிரயாண நன்மை, தன வருவாய், காரிய நன்மை.

**மகரம்** அதிகசெலவு, போசன சுகக்குறைவு, குடும்பக்கவலை, வேலைச்சுமை.

**கும்பம்** தெய்வசிந்தை, பெரியோர் சந்திப்பு, வெகுமானம், மாதர் நட்பு.

**மீனம்** சயனசுகக்குறைவு, சுபசெலவு, பயணம், தொழில் சிந்தை.

- வளவன்

## இரதோற்சவம்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ தலங்கா வற் பிள்ளையார் ஆலய இரதோற்சவ தினமாகிய இன்று காலை 7.00 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் இரத பவனி வருவார்.

ஜெய ஜெய கணபதி
கஜமுக கணபதி
திருநெல்வேலி பதியுறை
செல்வ மிகு கணபதி
தலங்கள் பல காவல் செய்யும்
தலங்காவற் கணபதி
இரத மதில் எழுந்து வந்தெமது
இருவினை அழிப்பாய் கணபதியே

- அடியார்

## கோவில் மாடுகளால் பயிர்கள் நாசம்

கட்டாமல் விடப்பட்டுள்ள கோவில் மாடுகளினால் திருநெல்வேலி கிழக்குப் பகுதித் தோட்டக்காரர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். இரவு நேரங்களில் வேலியைப் பிய்த்துக்கொண்டு தோட்டங்களுக்குள் புகும் இம்மாடுகள் குரக்கன் நடுகைக்காகப் போடப்பட்டுள்ள குரக்கன் பாத்திகளை அழித்து விடுவதுடன் மரவள்ளி, வாழை முதலிய பயிர்களையும் நாசமாக்கிவிட்டுச் செல்கின்றன.

இதுகுறித்து சம்பந்தப் பட்டவர்களிடம் முறைப்பாடு செய்தும் இதுவரை எதுவித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி தோட்டக் காரர்கள் கவலை தெரிவிக் கின்றார்கள். (அ)

ஏந்தத் தவறை நீ எங்கு கண்டாலும் அதை உன்னிடம் திருத்திக் கொள்.

—இங்கிலாந்து

வலம்புரி

# யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்திற்கு ஓர் அன்பு மடல்

யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு சேவையை வழங்கி வரும் ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் சேவைக்கு முதலில் பாராட்டுக்கள்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும், தனது சேவையை வழங்குவதில் ரெலிக்கொம் நிறுவன முகாமையும் பணியாளர்களும் ஆற்றும் சேவையை யாழ்ப்பாண மக்கள் மறப்பதற்கில்லை.

அதேநேரம் தொலைபேசிச் சேவையை வழங்குவதில், ஆரம்பம் தொடக்கம் செல்வாக்கு கலாசாரமும் பின் வாசல் வழிகளும் தாராளமாகச் செல்வாக்குச் செலுத்தினதென்பதை மறுப்பதற்கில்லை.

இத்தகைய செல்வாக்குகள் காலத்திற்குக் காலம் மாறி வரும் முகாமைகளிடையே ஏற்ற இறக்கமாக இருந்தாலும் அதன் தாக்கம் இன்று வரை நீடிப்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ரெலிக்கொம் நிறுவனத்திற்குச் சென்று படிவங்களை நிரப்பிக் கொடுத்த போதிலும் பதிவின் ஒழுங்கில் தொலைபேசிச் சேவை இணைப்பு வழங்கப்படவில்லை.

மாறாக தெரிந்தவர், பழகியவர், பண வசதியுடையவர் என்ற அடிப்படையில் இணைப்புக்கள் வழங்கப்பட்டன. இந்த உண்மை உறைப்பதற்காகவோ உணர்ச்சிவசப்படுவதற்காகவோ கூறப்படவில்லை.

மாறாக தற்போதைய யாழ்.ரெலிக்கொம் முகாமையில் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். தொலைபேசி இணைப்பு யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்ட போது இருந்த ஊழல், மோசடிகள் இப்போது இல்லை என்பதே அந்த நம்பிக்கையாகும்.

எனவே பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக ரெலிக்கொம் நிறுவனம் நடந்து கொள்வது கட்டாயமானதாகும்.

அதிலும் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பு வழங்கப்படுகின்றது என்னும் செய்தி மக்களை யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்திற்கு அலைய வைக்கின்றது.

பொதுமக்கள் அலைந்து திரிவதை எந்த நிர்வாகமும் அனுமதிக்கக் கூடாது. அதிலும் சிலர் ஓட்டோ பிடித்து காசை மடியில் கட்டிக் கொண்டு ரெலிக்கொம் நிறுவனத்தின் மாடிப்படி ஏறுகின்றார்கள்.

என்ன? ஏது? என்றால் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்குக் காசு கட்ட வந்தவர்களாம். எப்படியிருக்கின்றது நிலைமை? தள்ளாத வயதில் அடிக்கடி அலையும், பாவம் ரெலிக்கொமின் லூப்புக்களைக் கூடத்தாக்க வல்லது.

எனவே யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் ஒழுங்கான - பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தக் கூடியதான - நியாயம் என்று கருதக் கூடிய வகையில் சி.டி.எம்.ஏ. இணைப்புக்களை வழங்க வேண்டும். இது பொதுமக்களின் தாழ்மையான வேண்டுதல்.

# அரசாங்கம் ஊழலை நிறுத்தினால் எரிபொருளின் விலைகளைக் குறைக்கலாம்

## ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை

(கொழும்பு)

அரசாங்கம் இராஜினாமாச் செய்து விட்டு வீடு செல்லட்டும். நாங்கள் மக்களுக்குக் குறைந்த விலையில் எரிபொருள்களை வழங்கிக் காட்டுவோம். அரசாங்கத்தின் வீண் விரயத்தையும் ஊழலையும் நிறுத்தினால் எரிபொருள்களின்விலைகளை 20 சதவீதத்தால் குறைக்கலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்தை வெறுமனே விமர்ச்சிக்காமல் அரசியல் கட்சிகள் முடியுமானால் எரிபொருள்களை குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, நாட்டைக் கொண்டு நடத்த முடியாவிட்டால் அரசாங்கம் பதவி விலகிச் செல்ல வேண்டும். நாட்டைக் கட்டி எழுப்பவும் மக்களுக்கு குறைந்த விலையில் எரிபொருள்களைப் பெற்றுக் கொடுக்கவும் எங்களுக்குத் தெரியும்.

நாங்கள் ஏற்கனவே இரண்டு வருடங்கள் அரசாங்கத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்கள். நாங்கள் குறைந்த விலையில் எரிபொருள்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் அரசாங்கம் எதற்குப் பதவியில் இருக்க வேண்டும்?

பதவி விலகிச் சென்றுவிட வேண்டும். நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டிய முறை எங்களுக்குத் தெரியும். தற்போதைய நிலையில் அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்து விட்டு கூறும் காரணங்கள் நகைப்புக்குரியது. அரசாங்கம் மேற்கொள்ளும் வீண் விரயம் முதலில் நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் ஊழல் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயம் எரிபொருள்களின் விலைகளை 20 சதவீதத்தால் குறைக்கலாம். அதேவேளை ரூபாவின் பெறுமதியை நிலையாக வைத்திருக்க அரசாங்கம் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

எமது ஆட்சிக் காலத்தில் 93 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலரின் இலங்கைப் பெறுமதி தற்போது 112 ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் எரிபொருள்களின் விலைகள் உயர்வடைவது தவிர்க்க முடியாதது என்றார். (ச-5)

# பௌத்த மதத்திற்குத் தனியான தொலைக்காட்சி மத ரீதியான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்

## ஜே.வி.பி. கருத்து

(கொழும்பு)

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி தனியான தொலைக்காட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளமையானது நாட்டில் மத ரீதியான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தை துரிதகதியில் அபிவிருத்தி செய்வதற்காக உடனடியாக தேசிய நிதியம் ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி தனியான தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது எந்தளவுக்கு ஆரோக்கியமாக அமையும் என்பது கேள்விக்குரிய விடயமாகும். ஒரு மதத்திற்கு முன்னுரிமை வழங்கினால் அது ஏனைய மதங்களைப் பாதிக்கலாம்.

தற்போதைய நிலையில் கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் மதங்களும் தனியான தொலைக்காட்சிகளை ஆரம்பிக்க முயற்சிக்கலாம். இது மதங்களுக்கிடையில் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தும் விடயமாக அமையலாம். மேற்குலக நாடுகளில் மதங்கள் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் இலங்கையில் இவ்வாறான நிலைமை ஏற்படும் அபாயமேயுள்ளது. எனவே இவ்விடயம் குறித்துத் தொடர்புடையவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம்.

வீண் பிரச்சினைகளை உருவாக்குவதற்கு வழிசமைக்கக் கூடாது. நாட்டில் மதம் தொடர்பிலான வன்முறைகள் இடம்பெற்று விடக் கூடாது. இதேவேளை பாதுகாப்புப் படைகள் கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றும் நிலைமைக்கு வந்து விட்டன.

கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றியவுடன் அந்த மாகாணத்தைத் துரிதகதியில் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக தேசிய நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்த நிதியத்துக்கு அனைவரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். (எ-5)

# தகவல்களை மக்கள் அறிந்து கொள்ளும் உரிமையை அரசாங்கம் பாதுகாக்கும்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு)

தகவல்களை மக்கள் அறிந்துகொள்ளும் உரிமையைப் பாதுகாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். தகவல் ஊடக அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகத்துறையை அரசியல் மயமாக்குவதிலிருந்து நீக்குதல், ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தைத் துரிதப்படுத்தல், முழுநாட்டையும் உள்ளடக்கும் வகையில் இலத்திரனியல் ஊடக சேவைகளை விஸ்தரித்தல், ஊடகவியலாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகளின் எண்ணிக்கைகளை அதிகரித்தல், தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான சலுகை அடிப்படையில் வங்கிக் கடன்களை ஊடகவியலாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் போன்றவை உட்பட மேலும் பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

ஒழுக்கம் மிக்க எமது நாட்டுக்குப் பொருத்தமான ஊடக கலாசாரம் ஒன்றை விருத்தி செய்யும்படி ஜனாதிபதி ஊடகத் துறையினருக்கு அழைப்பு விடுத்தார். இது தொடர்பில் அரச ஊடக அமைப்புக்கள் அவற்றின் செயற்பாடுகளை சிறப்பாக ஒருங்கிணைக்க வேண்டியதன் தேவையையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

அபிவிருத்தியும் தொடர்பாடலும் சமமாகச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி ஊடக மற்றும் தொடர்பாடல் உபாய முறைகளை விருத்தி செய்வதற்கான கவனம் போதியதாக இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச ஊடகங்களில் நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் பொய்ப் பிரசாரங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் உதவியுடன் அவற்றுக்கான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார். (எ-5)

# பாதுகாப்புச் செயலாளர் மீதான தாக்குதல் குறித்த விபரம் பொலிஸாரால் சேகரிப்பு

இலங்கை பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்து மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் முச்சக்கர வண்டி கடந்த வருட இறுதியில் கொம்பனி வீதியில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்ட பிரதேசத்தின் காவலாளி தற்போது கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர் தன்னை முஸ்லிம் என அடையாளப்படுத்தியிருந்தார் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை இந்தத் தாக்குதல் குறித்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# இந்தியாவிலுள்ள அகதிகள் குறித்து பிரதமருடன் ஜே.வி.பி. பேச்சு

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் குறித்து ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு நேற்று மாலை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றுள்ளது. அண்மையில் தமிழ்நாட்டிற்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் பிமல் ரட்ணாநாயக்க ஆகியோர் இந்தியாவில் இலங்கை அகதிகளைச் சந்தித்தார்கள்.

இந்நிலையில் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்கள். (ச-5)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை பதவி யூலை முதல் பிரித்தானியாவிடம் கையளிப்பு

## சமாதான முயற்சியில் பங்கு வகிக்க சந்தர்ப்பம்

(கொழும்பு)

போர்த்துக்கல் அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை யூலை முதலாம் திகதி முதல் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங் கும் இணைத் தலைமை நாடுகளில் ஐரோப் பிய ஒன்றியமும் உள்ளதால் இலங்கை யின் சமாதான முயற்சிகளில் பிரித்தானியா முக்கிய பங்கு வகிக்கவுள்ளது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது;

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை இம் மாதம் முதலாம் திகதி பொறுப் பேற்றுள்ள போர்த்துக்கல் அடுத்த ஆறு மாதங்களுக்கு இப் பதவியை வகிக்கவுள்ளது.

போர்த்துக்கல் அரசாங்கத்தின் தூதரகம் இலங்கையில் இல்லை. எனவே அது தனது இராஜதந்திர செயற்பாடுகளை நேரடியாக இலங்கையில் மேற்கொள்வதில்லை.

இந் நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள போர்த்துக் கல் இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பதவியை வகிக்குமாறு பிரித்தா னியாவிடம் கேட்டுள்ளது.

இதனையடுத்து யூலை முதலாம் திகதி முதல் அடுத்த ஆறு மாத காலத்திற்கு இலங் கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தலை வராக கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதர கம் செயற்படவுள்ளது.

இதனையடுத்து இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு கொள்கையை கொழும் பிலுள்ள பிரித்தானிய தூதரகமே வகுக்க வுள்ளது. இலங்கையின் சமாதான முயற்சி களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட இணைத் தலைமை நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக பிரித்தானியா பிரதிநிதி த்துவம் செய்யவுள்ளது.

இனிவரும் காலங் களில் இலங்கையின் எதிர்கால சமாதான முன் னெடுப்புக்களில் பிரித்தானிய முக்கிய பங்கி னை வகிக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர். (எ-5)

## முல்லைத்தீவு வைத்தியசாலை முற்றாக செயலிழக்கும் நிலை

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை முற்றாக செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ள தாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. அரசாங்கம் முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான அனைத்து விநியோகங்களையும் நிறுத்தியுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நோயாளர்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் உரிய சிகிச்சை களை பெறமுடியாமல் பலர் உயிரிழப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## இல...

விடயங்களைக் கூறியுள்ளார்.

இச் சந்திப்பின்போது இரு தரப்பு உறவு கள் குறித்தும் இவர்கள் கவனம் செலுத்தி யுள்ளனர். சித்தார்த்தர் பிறந்த லும்பினிக் கும் இலங்கைக்குமிடையில் விமான சேவையை ஆரம்பிப்பது குறித்தும் இக் கலந்துரையாடலின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதுடன் லும்பினியில் விமான நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான யோசனைக்கு நேபாளப் பிரதமர் தனது ஆதரவை வெளியிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான விமான சேவை தொடர்பாக இம் மாத நடுப் பகுதியில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து துரித நடவ்டிக்கை எடுக்கப்படவுள்ளது.

லும்பினியில் சொகுசு ஹோட்டல் நிர்மா ணிப்பதற்கு இலங்கை முதலீட்டாளர்களை ஏற்பாடு செய்ய முடியுமென வெளிவிவகார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு நேபாளப் பிரதமர் இணக்கம் தெரிவித்துள் ளார். (சு-3)

# பஸ்ஸில் பயணித்த தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையிலிருந்து வெள்ள வத்தைக்கு பஸ்ஸில் பயணம் செய்து கொண்டி ருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். லோகநாதபிள்ளை பானுகோபன் (வயது 28) என்பவரே கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

பஸ்சை சோதனையிடுவதற்காக வழி மறித்த படையினர் குறித்த இளைஞரிடம் தன்னை அடையாளப்படுத்தக்கூடிய ஆவ ணங்கள் இருந்தும் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக உறவினர்கள் தெரிவித் துள்ளனர்.

அத்துடன் இந்த இளைஞன் தாக்கப்பட்ட நிலையிலேயே கோட்டைப் பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரி வித்த உறவினர்கள் இந்த இளைஞன் உள வியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர் எனவும் அதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் இருந் தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர். (சு)

## இலங்கை...

பகுதியில் இருந்து சென்றுள்ளனர்.

இதுவரை அவர்கள் வீடு திரும்பவில்லை யென உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அதேவேளை இம் மீனவர்கள் இந்திய அதி காரிகளின் காவலில் இருப்பதாக மாத்தறை யில் உள்ள மீனவ சமிக்ஞை அறைக்கு சமிக்ஞை கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

மீன்பிடி கைத் தொழில் அமைச்சு இது தொடர்பாக மீனவர்களை கண்டு பிடிப்பதற் கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என கொழும்பு இணையத் தளம் செய்தி வெளி யிட்டுள்ளது. (சு)

# புலிகளின் நிலக்கீழ் மருத்துவமனை இராணுவத்தினரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நிலத்திற்குக் கீழே அமைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறிய மருத்து வமனையை தோப்பூர் பள்ளிக்குடியிருப்புப் பகுதியில் இராணுவத்தினர் கண்டு பிடித்துள் ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மை யம் தெரிவித்துள்ளது.

சுமார் 40 அடி நீளமும் 25 அடி அகல மும் கொண்ட அந்த மருத்துவமனை 10 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டிருந்ததாக வும் அங்கிருந்து படுக்கைகள், தலையணை கள் உட்பட காலங்கடந்த மருந்துப் பொருட் களை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள தாகவும் அச் செய்திக் குறிப்பில் கூறப்பட் டுள்ளது.

மருத்துவமனையின் கூரை கொங்கிறீற் றினால் அமைக்கப்பட்டிருந்ததாகவும் வான் தாக்குதலில் இருந்து தப்பிக்கும் வகையில் அதற்கு மேல் புல் வளர்க்கப்பட்டிருந்ததாக வும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## கண்காணிப்புக்குழுத்...

களையும் சந்தித்து உரையாடு வார் என நம்பப்படுகிறது. இதேவேளை கண் காணிப் புக்குழுத் தலைவரின் இலங்கை விஜயத்தி னை உறுதிப்படுத்திய கண்காணிப் புக்குழு வின் பேச்சாளர் ;

வவுனியா மற்றும் கிளிநொச்சி விஜயங் கள் இதுவரை வரையப்படவில்லை என நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை போர் நிறுத்தக் கண்கா ணிப்புக்குழு எதிர்வரும் காலங்களில் வாரா ந்த அறிக்கைகளை வெளி யிட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் ஒவ்வொரு சம்பவங்கள் இடம் பெறுகின்ற போதும் அச் சம்பவங்கள் குறித்து அறிக்கைகள் வெளியிட்டு வந்தமை குறிப் பிடத்தக்கது. (சு-3)

## நல்லூர்ப்...

மற்றும் தனியார் உத்தியோகத் தர்கள் கடமைக்குச் செல்ல அனுமதிக்கப்பட் டனர். இத் தேடுதல் நடவடிக்கையின் போது அப் பகுதிகளில் உள்ள வீடுகள் யாவும் படை யினராலும் பொலிஸாராலும் தீவிர சோத னைக்குட்படுத்தப்பட்டதுடன் அடையாள அட்டைகளும் பரிசோதனை செய்யப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது. (சு-3)

## அரசு-விடுதலைப்புலிகளுடன் பேச்சு...

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தடைப்பட்டுள்ள சமா தானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் பௌயர் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் பௌயர் முதலில் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சு நடத்துவார் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இச் சந்திப்பின் போது பாதுகாப்பு விடயத் தில் உறுதியளிக்கப்பட்டால் பௌயர் கிளி நொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளைச் சந்திப்பார் என நோர்வேயை சுட்டிக்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இரு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ள பௌயர் அப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு நோர்வேக்கு புறப்பட்டு நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல் ஹெய்மை சந்திப்பார் என்றும் தெரிய வருகிறது.

அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுக்கு இணங்கினால் அது தொடர்பான ஆயத்தங் களுடன் எரிக்சொல் ஹெய்மும் பௌயரும் மீண்டு இலங்கை வருவார்கள் என்றும் செய் திகள் தெரிவித்தன.

இ;தேவேளை அரசாங்கம் யுத்த முனைப் புக்களை கைவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென் றும் அதே சமயம் இனப்பிரச்சினைத் தீர்வுக் கான யோசனைகளை விரைவில் சமர்ப்பிக் கவேண்டுமென்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை கள் அண்மையில் வலியுறுத்தியிருந்தன.

இணைத் தலைமைகளின் கோரிக்கை யினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தவறி னால் கடுமையான தடைகளை இலங்கை அரசாங்கத்தின் மீது விதிக்கப்போவதாகவும் இணைத் தலைமைகள் எச்சரிக்கை விடுத் திருந்ததாகவும் இதனையடுத்தே அரசாங்கம் நோர்வே அனுசரணையாளர்களை மீண்டும் அமைதி முயற்சிகளில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கரும்புலிகள் தினம் அனுஷ் டிப்பப்படவுள்ள நிலையில் விடுதலைப்புலி கள் பாரிய தாக்குதலை தென்னிலங்கை யிலோ அல்லது நாட்டின் ஏனைய பகுதி களிலோ மேற்கொள்ளக் கூடும் என்ற அச்ச உணர்வு காரணமாகவே அரசாங்கம் தற் போது அமைதி முயற்சிகள் குறித்து அக்க றை செலுத்துவதாகவும் அமைதி முயற் சிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை மேற்கொள்ள மாட்டார்கள் என்பதே அரசாங்கத்தின் நம்பிக்கையெனவும் றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள் ளது. (சு-5)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர்...

ணையாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக் கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதிகள் மீது மேற்கொண்டு வரும் வலிந்த தாக்குதல் கள் மற்றும் தமிழ் மக்கள் கடத்தப்படுதல், படு கொலை செய்யப்படுதல் போன்ற விடயங் களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெளி வுபடுத்தியுள்ளனர்.

தற்போதைய நிலை தொடராமல் தடுப் பதற்கு அனைத்துலக சமூகம் அரசாங்கத் தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்றும் அதற்கான ஏற்பாடுகளை நோர்வே மேற்கொள்ளவேண்டும் என்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-5)

## காணாமல் போன 1713 பேரில்...

மகாநாம திலகரத்ன தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையொன்றி லேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, காணாமல் போன ஆயிரத்து 713 பேர்களில் ஆயிரத்து 002 பேர் வீடு திரும்பியுள்ளனர். ஆட்கடத்தல் சம்பந்தமாக 307 முறைப்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

இதில் கடத்தப்பட்டதாக கூறப்பட்டவர்களில் 132 பேர் வீடு திரும்பியுள்ளனர். படுகொலை கள் சம்பந்தமாகவும் ஆணைக்குழு 430 முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளது. இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

இரு இடைக்கால அறிக்கைகளைச் இது வரை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ளது. ஆட்கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் படுகொலைகளைத் தடுப்பதற்குச் சட்ட அமைப்புக்களினால் மேற்கொள்ளப் படவேண்டிய சாதகமான நடவடிக்கைகள், சிபார்சுகள் தொடர்பாக அரசாங்கத்தின் கவ னத்திற்கு ஆணைக்குழு அதன் இறுதி அறிக் கையில் அறிவுறுத்தவுள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பான பொலிஸா ரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற் கும் சுயாதீன குழுவொன்றைத் ஸ்தாபிப் பதற்கும் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு அதிகூடிய மனிதாபிமான உதவிக ளை வழங்குவதற்கு சிபார்சு செய்துள்ளதா கவும் அவர் தெரிவித்திருப்பதாக அச் செய்தி யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு-5)

## அனைத்துக்கட்சிக்...

ஐக்கிய தேசியக்கட்சியும் அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதி கள் குழுவில் இடம் பெறாத நிலையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கப்ப டும் யோசனைகள் அனைத்து தென்னிலங் கை அரசியல் கட்சிகளினதும் ஒருமித்த கருத்தாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சு-5)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் துரைராசா

(ஓய்வு பெற்ற பரிசோதகர்-யாழ்.போதனா வைத்தியசாலை)

கோகுல வீதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் துரைராசா 29.06.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணி யம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக்கண வருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2007) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக [illegible] இந்து மயானத்திற்கு [illegible] செல்லப்படும்.

இந்த அறிவித்தலை [illegible] உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்;
து.மதனகுமார் (மகன்)

(34)

## விடுதலைப்புலிகளின்...

ரட்ணசிறி விக்கிரம நாயக்க இவ் வெடிபொருட்கள் மீட்கப்பட்ட பின் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு யூலை 5 ஆம் திகதி முதலாவது கரும் புலி போராளியான கப்டன் மில்லர் வெடிபொருள்கள் நிரப் பிய ரக்ட் வண்டியை யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம் ஒன் றில் செலுத்தி வெடிக்கவைத்தார். அதில் 40 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரும்புலிகளுடன் போராடுவது கடினமா னது. ஏனெனில் அவர் கள் தமது உயிரைப் பற்றி கவலைப்படுவதில்லையென ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி சரத் முனசிங்க தெரிவித்துள் ளதாக ஏ.எவ்.பி.தெரிவித்துள்ளது. (சு-5)

## யாழ்...

மீது நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் இராணுவத்தினர் பதில் தாக்கு தல் நடத்தியுள்ளதாக ஊடகமையம் தெரி வித்துள்ளது.

இத் தாக்குதலின் பின்னர் நான்கு விடு தலைப்புலி உறுப்பினர்களின் உடல்களை பாதுகாப்புப் பிரிவினர் கண்டுள்ளனர். தாக் குதலின் பின்னர் இப் பகுதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது ஆர்.பி.ஜி. குண்டு ஒன்றை இராணுவத்தினர் மீட்டுள்ள தாகவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (சு-3,5)